# TNPSC Tamil Current Affairs 1st & 2nd April 2017

1. இந்தியாவின் முதல் சர்வதேச கால் மற்றும் வாய் நோய் மையம் (ICFMT) எந்த மாநிலத்தில் அமைக்கப்படவுள்ளது?

A. ஒடிசா

B. உத்தர பிரதேசம்

C. அசாம்

D. அரியானா

விடை : A. ஒடிசா

ஐ. நாவின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு மற்றும் மத்திய அரசாங்கத்தின் ICARன் கூட்டு முயற்சியில் இந்த ஆராய்ச்சி மையம் ஒடிசாவில் புவனேஸ்வரிலுள்ள ஆர்குலில் ஏப்ரல் 1 2017 அன்று அமைக்கப்படவுள்ளது. இம்மையத்தை, மத்திய வேளாண் அமைச்சர் ராதாமோகன் சிங் திறந்து வைக்கிறார். இம்மையம் கால்நடை மற்றும் எருமைகளின் வைரஸ் நோய்களை ஆய்வு செய்யும். மேலும் இம்மையம், அவற்றின் கால் மற்றும் மூளை நோய் வைரஸ் ஆகியவற்றை பாதுகாப்பாகக் கையாளுவதற்கும் மற்றும் சேமித்து வைப்பதற்கும் வசதி கொண்டது. நாடு முழுவதிலிருந்து வரும் மாதிரிகள் இந்த ஆராய்ச்சி மையத்தில் நோயை குணப்படுத்துவதற்காகவும் ஆராய்ச்சிக்காகவும் சேகரிக்கப்படும். குறிப்பிடத்தக்க வகையில் இந்தியா ரூ. 23,000 கோடியை இந்நோய்க்காக வருடந்தோறும் செலவழிக்கிறது.

2. நாளந்தா பல்கலைக்கழகத்தின் புதிய துணை வேந்தராக நியமிக்கப்பட்டவர் யார்?

A. Pankaj Mohan

B. Sunaina Singh

C. Arvind Sharma

D. Vijay Bhatkar

விடை : B. Sunaina Singh

நாளந்தா பல்கலைக்கழகத்தின் புதிய துணை வேந்தராக நியமிக்கப்பட்டவர் Sunaina Singh . விரைவில் இவர் பதவியேற்பாரென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது, இவர் ஹைதராபாத்திலுள்ள ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழி பல்கலைக்கழகத்தின்(EFLU), துணை வேந்தராக செயல்பட்டு வருகிறார்.
நாளந்தா பல்கலைக்கழகத்தின் தலைமையகம் பீகாரிலுள்ள ராஜ்கிர் எனுமிடத்தில் உள்ளது. இதன் வேந்தராக இந்தியாவின் முதல் சூப்பர் கம்ப்யூட்டரின் தந்தை மற்றும் விஞ்ஞானியான Dr.Vijay Pandurang Bhatka அவர்கள் உள்ளார்.

3. எந்த இந்திய முதலமைச்சர் USIBC Transformative Chief Minister (TCM) விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்?

A. Sarbananda Sonowal

B. Nitish Kumar

C. N Chandrababu Naidu

D. Raman Singh

விடை : C. N Chandrababu Naidu

ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு, அமெரிக்க இந்திய வணிகக் கவுன்சில்(USIBC)ன் Transformative Chief Minister (TCM) விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். மே 8, 2017 அன்று கலிபோர்னியாவிலுள்ள மென்லோ பார்க்கில் நடைபெற்ற, 2வது ஆண்டு மேற்குக்கடற்கரை உச்சிமாநாட்டில் (West Coast Summit) இவ்விருதினை பெற்றுக்கொண்டார்.

4. 17 ம் நிதியாண்டுக்காக இந்தியாவின் உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு எவ்வளவு Official Development Assistance (ODA) கடனை ஜப்பான் வழங்கும்?

A. Yen 201 billion

B. Yen 232 billion

C. Yen 445 billion

D. Yen 371 billion

விடை : D. Yen 371 billion

2016-2017 நிதியாண்டில், இந்தியாவின் உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு Official Development Assistance (ODA) கடனாக 371.345 பில்லியன்( இந்திய மதிப்பில் 21,590 கோடி) யென் பணத்தை ஜப்பான் வழங்கும். இதில் இந்தியாவின் புதிய தூதரகம் போன்ற உள்கட்டமைப்பு திட்டங்களும் அடக்கம். இதற்கான பணப்பரிவர்த்தனை , பொருளாதார அலுவல்கள் துறை இணைச்செயலாளர் திரு.S Selvakumar மற்றும் ஜப்பானின் தூதுவர் கென்ஜி ஹிராமாட்சு ஆகியோருக்கு இடையே பரிமாறப்பட்டன. (பரிமாற்ற விகிதம்: Re.1 = Yen 1.72)

5. மத்திய கூட்டு மன்றம் மற்றும் சுங்கக் குழுவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A. Vanaja Sarna

B. Najib Shah

C. Ram Tirth

D. Milind Sharma

விடை : A. Vanaja Sarna

1980ம் ஆண்டு இந்திய வருவாய் சேவை (IRS)ன் அலுவலராக பணிபுரிந்த, Vanaja N Sarna, மத்திய சுங்கவரி மற்றும் சுங்கக்குழுவின் (CBEC) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன் இப்பதவியில் நஜிப் ஷா பணிபுரிந்தார். CBEC என்பது மறைமுக வரி மற்றும் மத்திய சுங்கவரி கடமை தொடர்பான கொள்கை மற்றும் நிர்வாகச்சிக்கல்களை தீர்ப்பதற்கான உச்சநீதிமன்றமாகும். இது நிதியமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது, இதில் ஒரு தலைவர் மற்றும் அதிகபட்சம் ஆறு உறுப்பினர்கள் உள்ளனர்.

6. 1 GBps வேகங்கொண்ட கம்பியால் இணைக்கப்பட்ட அகலக்கற்றை இணைய சேவையை பெறும் முதல் இந்திய நகரம் எது?

A. சென்னை

B. ஹைதராபாத்

C. பெங்களூரு

D. கொச்சி

விடை : B. ஹைதராபாத்

The Atria Convergence Technologies (ACT) Fibrenet சமீபத்தில் ஹைதராபாத்தில் தனது 1 GBps வேகங்கொண்ட கம்பியால் இணைக்கப்பட்ட அகலக்கற்றை இணைய சேவையை வழங்கியது. இதன் மூலம் ஹைதராபாத் இந்தியாவின் முதல் 'Giga-Enabled' நகரமாக மாறுகிறது. (ACT) Fibrenet, கம்பியிழை தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இச்சேவையை வழங்குகிறது. இந்த 1 GBps வேகமென்பது, இந்தியாவில் தற்போது வழங்கப்படும் 2.5 மெகாபைட் சராசரி இணையவேகத்தை விட 400 மடங்கு வேகமானதாகும். இதன் வேகம், USB டிரைவிலிருந்து தரவை மாற்றுவதை விட விரைவாக இணையத்திலிருந்து பதிவிறக்கங்களை செய்யும். இதற்கான மாத கட்டணமாக ரூ. 5,999 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

7. எந்த நாடு South Asia Sub-Regional Economic Cooperation (SASEC)ன் புதிய உறுப்பினர் ஆனது?

A. பூடான்

B. பாகிஸ்தான்

C. ஈரான்

D. மியான்மர்

விடை : D. மியான்மர்

2017ல் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)யின் South Asia Sub-Regional Economic Cooperation (SASEC)ன் திட்டத்துக்கான 7வது உறுப்பினராக மியான்மர் இணைந்தது. தெற்காசியாவின் பங்களாதேஷ், பூட்டான், இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளின் கோரிக்கைக்கேற்ப 2001ல் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டம் (ADB) யிலிருந்து பொருளாதார ஒத்துழைப்பை எளிதாக்க உதவுகின்றது. SASEC திட்டம் பிராந்திய செழிப்பை உணர்ந்து, எல்லை தாண்டிய இணைப்புகளை மேம்படுத்துவதன் மூலம், வேகமான மற்றும் திறமையான வியாபாரத்தை எளிதாக்குவதோடு எல்லைக்குட்பட்ட அதிகார வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்கும் உதவுகிறது. 2014ல் இலங்கை & மாலத்தீவு SASECயுடன்

இணைந்தது.

8. AYUSH மருத்துவ முறைக்கான ஒழுங்குமுறை அமைப்புகளை ஆய்வு செய்வதற்காக, எந்த உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டது?

A. Madhukar Gupta குழு

B. Arvind Panagariya குழு

C. Shailesh Nagar குழு

D. H R Nagendra குழு

விடை : B. Arvind Panagariya குழு

அர்விந்த் பனகாரியா தலைமையிலான உயர்மட்டக்குழு, AYUSH மருத்துவ முறைக்கான ஒழுங்குமுறை அமைப்புகளின் செயல்பாட்டை ஆய்வுசெய்ய அமைக்கப்பட்டுள்ளது. இந்திய மத்திய மருந்துக்கழகம் (CCIM) மற்றும் மத்திய ஹோமியோபதி கழகம் (CCH) மற்றும் அவர்களின் ஆளும் சட்டங்களான இந்திய மத்திய மருந்துக்கழகம் (CCIM) சட்டம் 1970 மற்றும் மத்திய ஹோமியோபதி கழகம் (HCC) சட்டம் 1973 ஆகியன முறையான சீர்திருத்தங்களை பரிந்துரைக்கும். பனகாரியா NITI Aayogன் துணைத்தலைவராவார். AYUSH மருந்துகள், CCIM & CCH என்ற இரண்டு சட்ட ஒழுங்குமுறை அமைப்புகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன. இந்த ஒழுங்குமுறை அமைப்புகள், AYUSH அமைப்புகளின் துணைநிலை ஒழுங்குமுறைகளின் மூலம் கல்வி மற்றும் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துகின்றன. மேலும் இது, இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆகியவற்றிற்கு தனித்தனியாக மையப்பதிவேடுகளை பராமரிக்கின்றது.

9. Insolvency and Bankruptcy Board of India (IBBI)ன் புதிய முழு நேர உறுப்பினர்(WTM) யார்?

A. A Unnikrishnan

B. Amardeep Singh Bhatia

C. Navrang Saini

D. Ajay Tyagi

விடை : C. Navrang Saini

புது டில்லியில் Insolvency and Bankruptcy Board of India (IBBI)ன் புதிய முழு நேர உறுப்பினராக Dr. Navrang Saini பொறுப்பேற்றுள்ளார். தகவல் பரிமாற்றங்கள், தகவல் பயன்பாடுகள், நொடிப்பு தொழில்சார் முகவர்கள் மற்றும் நிறுவனங்கள், மதிப்பீடுகள், கண்காணிப்பு, புலனாய்வு மற்றும் குறைதீர்ப்பு குறைபாடு ஆகியவற்றை உள்ளடக்கிய பதிவு மற்றும் கண்காணிப்புப்பிரிவை இவர் கவனிக்கிறார். மேலும் இவர் சட்ட விவகாரங்களையும் கவனிப்பார். இவர் இந்திய கார்ப்பரேட் சட்ட சேவை (ICLS) உறுப்பினராக பணியாற்றியுள்ளார். பல்வேறு சமயங்களில் கார்ப்பரேட் விவகார அமைச்சகத்துக்கு இவர் பணியாற்றியுள்ளார். MCA 21ன் செயலாக்கத்தில் முக்கிய பங்கை இவர் வகித்துள்ளார். இவர் கடைசியாக பெருநிறுவன விவகார அமைச்சகத்தின் பொது இயக்குனராக பதவி வகித்தார்.

10. LGBTன் வானவில் கொடியை உருவாக்கிய Gilbert Baker காலமானார். அவர் எந்த நாட்டைச்சேர்ந்தவர்?

A. பிரான்ஸ்

B. ஜெர்மனி

C. கியூபா

D. US

விடை : D. US

ஓரினப்புணர்விற்கான சின்னமாக வானவில் கொடியை உருவாக்கிய Gilbert Baker சமீபத்தில் அமெரிக்காவில் கன்சாஸ் நகரில் காலமானார். Bakerன் கொடியானது பரவலாக LGBT உரிமைக்கான காரணங்களுடன் தொடர்புடையதாகும்.